1979 ஏப்ரல் 28]

திருக்கோவிலூர் பேரூராட்சி.

* வினா எண் 867—திரு. கோ. ரகோத்தமன், திரு. சென்னை மு. அரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் டவுன் பஞ்சாயத்தை நகராட்சியாக மாற்றும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது உத்தரவு பிறப்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) & (ஆ) 9—3—1979 நாளிட்ட அரசாணை பல்வகை எண் 381-ல் தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கும் திருக்கோயிலூர் பேரூராட்சியினை நகராட்சியாக மாற்ற முன்னறிவிப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கோ. ரகோத்தமன்: தலைவரவர்களே, வரும் தேர்தலுக்கு முன்பாக அதைப் பிரிக்க இந்த அரசு உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, உத்தேசம் உள்ளது.

வத்திராயிருப்பு பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல்

* வினா எண் 868—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் வட்டம் வத்திராயிருப்பு பேரூராட்சியில் குடிநீர்த் திட்டத்திற்கென பேரூராட்சியின் சார்பில் ரூபாய் 16,500 ஆய்வுத் தொகை கட்டியும் குடிநீர்த் திட்டம் துவக்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் திட்டம் எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம். வத்திராயிருப்பு கட்டிய சரியான ஆய்வுத் தொகை ரூபாய் 15,500.

(ஆ) ஆய்வு களப்பணிகள் முடிவடைந்து, உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வத்திராயிருப்பு பேரூராட்சிக்கு வந்தபோது அங்கே மக்களுக்கு குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவேன் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். வாக்குறுதி கொடுத்த அடிப்படையில் இப்போது அவர்களுடைய பதில் அமைந்

திருக்கிறது. ஆகையால் அதற்கான உத்தேச மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, குடிநீர் கொடுக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறேனே தவிர எந்தத் தேதியில் கொடுக்கிறேன் என்று சொல்லவில்லை. ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், வத்திராயிருப்பு பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம் தயாரிப்பு தொடர்பாக தகுந்த நீர் ஆதாரத்தைக் கண்டுபிடிப்பதில் தாமதம் ஆனதால் அந்தத் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு தயாரிப்பதில் தாமதம் ஏற்படுகிறது. அதற்குரிய களப் பணிகள் தற்போது முடிவுபெற்றுள்ளன; முடிந்தவுடன் மதிப்பீடு தயாரிக்கப் பட்டு வருகிறது. இந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு உத்தேச மதிப்பீடு மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், (இராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை) இடமிருந்து கிடைத்தவுடன் பரிசிலித்து, அரசு ஒப்புதல் வழங்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அங்கு குடிநீர் திட்டம் தீட்டப்பட்டு, அது 'ஃபெயில்யூர்' ஆகி விட்டது. ஏனென்றால் சாக்கடை நீரும், குடிநீரும் ஒன்றாக கலந்து, மக்கள் விவரம் தெரியாமல் சாக்கடைத் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே, இத் திட்டத்தை ஆரம்பிக்கும்போது குடிநீர்க் குழாயைத் தனியாகவும், சாக்கடைக் குழாயைத் தனியாகவும் போட ஏற்பாடு செய்யப்படுமா? அதற்கு மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, ரூபாய் மதிப்பீடு இன்னும் வரவில்லை என்று சொன்னேன். வந்தவுடன் அரசு ஒப்புதல் வழங்கும். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் குடிநீர் என்றால் அது குடிநீராகத்தான் இருக்கும். அதுவும் நன்றாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீராகக் கொடுப்போம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாறு அணைத் திட்டம்

*வினா எண் 869—திரு ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் உள்ளாறு அணைத்திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி நெல்லை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் போடப் பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?